பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 01 திங்கட்கிழமை 17.11.2025 கதிர் 009

## இனி இது ரகசியம் அல்ல!

இலஞ்சம், ஊழல் ஆணைக்குழுவில் யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்சிறீதரனுக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் ☞2

# சில கடமைகளில் இருந்து விலகி அரச வைத்தியர்கள் போராட்டம்

### ஆளும்தரப்புக்கு எதிராக இன்று முதல் தொடக்கம்

அரச வைத்தியசாலை கட்டமைப்பில் அத்தியாவசிய மருந்து தட்டுப்பாடு மற்றும் வைத்தியசாலைக்கட்டமைப்பில் உருவாகியுள்ள கடும் நெருக்கடிகளுக்கு, ஆளும்தரப்பு உரிய தீர்வுகளை வழங்காத நிலையில்இன்றுமுதல்(17)அரச வைத்தியர்கள் தொழில் முறை நடவடிக்கைகளைமுன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

அதற்கமைய இன்று காலை 8.00 மணி முதல் சகல வைத்தியர்களும் ஒரு சில கடமையிலிருந்து விலகி, போராட்டத்தில்ஈடுபட உள்ளனர் என்றுஅரசவைத்தியஅதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அரச வைத்தியசாலை கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள அத்தியாவசிய மருந்து தட்டுப்பாடு உள்ளிட்ட ஒரு ☞2

# பெருந்தோட்டக் கம்பனிகளுடன் ‘டீல்’ வைத்துள்ளது ஆளும்தரப்பு

### அஜித் பி. பெரேரா எம்.பி. குற்றச்சாட்டு

பெருந்தோட்ட கம்பனிகளுடன் ஆளும்தரப்பு டீல் வைத்துள்ளது.பெருந்தோட்ட நிறுவனங்களின் இலாப நட்டத்தை கணக்காய்வு செய்து வருமானத்தின் உச்ச பயனை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஐக்கய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோட்டத் தொழிலாளர்களுக்கு 200 ரூபா சம்பள அதிகரிப்பு பற்றி ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன குறிப்பிட்ட கருத்தை ஆளும்தரப்பு திரிபுபடுத்திவிட்டது.

கடந்த ஆளும்தரப்பும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை வழங்குவதாக குறிப்பிட்டது.வர்த்தமானி அறிவித்தலும் பிரசுரிக்கப்பட்டது.மக்களும் கொண்டாடினார்கள். ஆனால் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. ☞6

# திருகோணமலை கடற்கரையில் அடாத்தாக புத்தர் சிலை வைப்பு

## தமிழ் அரசுக் கட்சியின் எதிர்ப்பை அடுத்து அகற்றப்பட்டது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் உடனடி நடவடிக்கை







திருகோணமலை கடற்கரைப் பகுதியில் அனுமதியின்றி அடாத்தாகக் கட்டடப்பட்டு வரும் பௌத்த வழிபாட்டிடத்தில் அத்துமீறி நேற்றிரவு பிக்குகளால் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டது. அதற்குக் கடும் எதிர்ப்பு எழுந்ததை அடுத்து அந்தச் சிலை உடனடியாக அங்கிருந்து பொலிஸாரால் அகற்றப்பட்டது.

பௌத்த பிக்குகள் புத்தர் சிலையை அடாத்தாக வைத்தமைக்குத் தமிழ் அரசியல்வாதிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்திற்கு இந்த விடயத்தை எடுத்துச் சென்றனர். இதையடுத்து அமைச்சரின் நேரடி உத்தரவின் பேரில் சிலை பொலிஸாரால் அகற்றப்பட்டது.

சிலை அகற்றப்பட்டதையடுத்து அந்தப் பகுதியில் நேற்று நள்ளிரவு வரை பதற்றமான சூழ்நிலை நிலவியது. பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்புக்காக ☞2

# வன்முறையூடாக ஆட்சியை கைப்பற்றும் எண்ணமில்லை

### நுகேகொடை போராட்டம் தொடர்பில் கம்மன்பில விளக்கம்

திசைக்காட்டியுடன் எம்மை ஒருபோதும் ஒப்பிட வேண்டாம். 1977, 1987 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வன்முறையின் ஊடாக ஆட்சி அதிகாரத்தை பெற்றதை போன்றதொரு எண்ணம் எம்மிடம் இல்லை. தேர்தல் இடம்பெறும் வரை காத்திருப்போம். நவம்பர் 21 நுகேகொடையில் அதிக தலைகளைக் காண முடியும் என்ற நம்பிக்கையுள்ளது என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில்நேற்றுசெய்தியாளர்களிடம்இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகவலைத்தளம்மற்றும் ஊடகங்களினூடாக எம்மைக்கடுமையாகச்சாடியமைக்குஆளும்தரப்பிற்கு நன்றி தெரிவிக்க கடமைபட்டுள்ளோம். எம்மை பிரபலமாகியுள்ளனர். இன்று இந்த நாட்டின் பாடசாலை மாணவர்கள் முதல் தற்போதைய ஆளும்தரப்பினருக்கு எதிராக இடம்பெற உள்ள முதலாவதுபேரணிநவம்பர்21நுகேகொடைபகுதியில் இடம்பெற உள்ளது என்பதை அறிந்துள்ளனர். இந்தப் பேரணி தொடர்பில் பரப்புரை மேற்கொள்ள ஆளும்தரப்பிடம் உள்ள பணத்தை போல எம்மிடம் பணமில்லை.

ஜே.வி.பிமற்றும்என்.பி.பிஆகியனஎதிர்க்கட்சியாக இருந்தபோதே பரப்புரைக்கு அவர்களிடம் கோடிக்கணக்கான பணம் கையிருப்பில் இருந்தமை அனைவரும் அறிந்த விடயமாகும். பரப்புரையை முன்னெடுக்கும் பின்னி எம்மிடம் இல்லாத இந்த சந்தர்ப்பத்தில், பேரணி தொடர்பில் பரப்புரை செய்த ஆளும்தரப்புக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நவம்பர் 21 நுகேகொடையில் அதிக தலைகளை காண முடியும் என்ற நம்பிக்கையுள்ளது. இது அரசுத் தலைவருக்கு எதிரானதோ அல்லது ஆளும்தரப்பை வெளியேற்றுவதற்கான பேரணியோ அல்ல.

ஆளும்தரப்புக்குஇன்னும்4வருடங்கள்உள்ளன, அந்தகாலப்பகுதியில்ஆளும்தரப்புபொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே நடைபவனியில் ஈடுபட உள்ளோம். ஆளும்தரப்பு அளித்த வாக்குறுதிகளை மீள நினைவூட்டுவதில் உள்ள தவறு என்ன? அடக்குமுறையையும் ,ஊழலையும் விரைவில் முடிவுக்கு கொண்டு வருமாறு அரசாங்கத்தை ☞2

# கட்சிகள் இணையும் ஆர்ப்பாட்டம் ஆளும்தரப்பிற்குப் பெரும் சவால்

### சாகர காரியவாசம் கருத்து

ஆளும்தரப்பிற்கு எதிரான போராட்டத்தில்சகலஅரசியல்கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளமைஆளும்தரப்பிற்கு பெரும் சவாலாக அமையும். மாகாண சபைத் தேர்தலில் ஒன்றிணைந்து செயற்படுவது குறித்து ஆராய்வோம் எனஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொது ஜன பெரமுனவின் பணியகத்தில்நேற்றுநடைபெற்றதொகுதி அமைப்பாளர்களுடனான ☞6

### ஆளும்தரப்புக்கு எதிரான

# அனைத்துக் கட்சிகளும் நுகேகொடைக்கு வருக

### நாமல் ராஜபக்ச அழைப்பு

தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய எந்த வாக்குறுதிகளையும் ஆளும்தரப்பு நிறைவேற்றவில்லை.

ஆளும்தரப்பிற்கு எதிரான அனைத்துக் கட்சிகளும்நவம்பர்21நுகேகொடைக்கு வந்து ஆளும்தரப்பிற்கு எதிரான ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தொடங்கப்பட்டுள்ளன என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இதுதொடர்பில்சனிக்கிழமை முறைப்பாட்டாளரிடம் 7 மணி நேரமாக வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த வாக்கு மூலத்தில் அவர் சிறீதரனுக்கு எதிராக ஆணித்தரமானஆதாரங்களைமுன்வைத்தார் என்று சொல்ல முடியவில்லை. அவரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் சிறீதரனுக்கு யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும்இருசுப்பர்மார்க்கெட்டுக்கள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால், அவற்றில் ஒன்று சிறீதரனின் சகோதரனின் பெயரிலும் மற்றொன்று சிறீதரனின்சகோதரியின்மகளின்பெயரிலுமே இருப்பதாக அவரே குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் இவையிரண்டும் சிறீதரனின் சொத்துக்களே,பினாமிகளின்பெயரில்உள்ளன என்பது அவரது வாதம். இதனடிப்படையில் சிறீதரனின்உறவினர்களிடமும்ஆணைக்குழு வாக்குமூலங்களைப் பதிவு செய்யும் என்று தெரிகிறது.

இதில் ஒரேயொரு விடயம் மட்டுமே சிறீதரனுக்கு எதிரானதாக, சிக்கலானதாக, அவரை மாட்டவிடக்கூடியதாக அமைந்திருக்கிறது. அது மதுபான நிலையத்திற்கு அனுமதி பெற்றுக்கொடுத்தார் அல்லது மதுபான நிலையத்தை பினாமி பெயரில் வைத்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டோடு தொடர்புடையது. இந்த விடயத்தில் சிறீதரனின் மகனையும் இழுத்து விட்டிருக்கிறார் முறைப்பாட்டாளர். மதுபான நிலையம் ஒன்றுக்காக கண்டாவளை பிரதேச செயலகத்தில் பணத்தைச் செலுத்தியவர் சிறீதரனின் மூத்த மகன் என்று அவர் ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித்திருக்கிறார். இந்த விவகாரத்தை அவரால் நிரூபிக்க முடிந்தால், அது தொடர்பில் சிறீதரன் விளக்கமளிக்கவேண்டியிருக்கும்.

..................................................

ஒரு காலத்தில் தமிழ் அரசுக் கட்சியைப் பார்த்துஅவர்கள்முதலில்நீதிமன்றத்தில்உள்ள தமது கட்சிப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டு வரட்டும் என்று வாய்ச்சவடால் விட்ட கட்சி ரெலோ. இப்போது அந்தக் கட்சியே நீதிமன்ற வாசலில் நிற்கும் நிலைதான் வரப்போகிறது என்று தெரிகிறது. ஏற்கனவே கட்சியின் நிதிச் செயலாளர் கட்சியின் முன்னாள் உறுப்பினர்ஒருவருக்குஎதிராகநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார் என்று கூறப்படுகின்றது. அண்மையில் கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் தலைமைக்குழுவின்வெளிநாட்டுஉறுப்பினர் ஒருவரும்தம்மீது அவதூறுபரப்பப்படுவதாகத் தெரிவித்து சட்டத்தரணி மூலம் கட்சியின் முன்னாள் உறுப்பினருக்கு எதிராகவும் கட்சியின் உறுப்பினருக்கு எதிராகவும் நோட்டீஸ் அனுப்பியுள்ளனர். ஆளுக்கு தலா 5 கோடி ரூபாய் இழப்பீடு கேட்டு இந்த நோட்டீஸ் கள் அனுப்பப்பட்டுள்ளன. (தலைவருக்கும் ரூ. 5 கோடிதான் மான இழப்பு, தலைமைக் குழு உறுப்பினருக்கும் ரூ. 5 கோடிதான் மான இழப்பு).

இதற்கிடையில் இப்படி நோட்டீஸ் அனுப்பப்பட்ட, கட்சி உறுப்பினரான ஹான்ஸ் குமார் என்பவரைக் கட்சியில் இருந்து இடைநிறுத்தியிருக்கிறது ரெலோ. தலைவரை பொதுவெளியில் படுமோசமாக விமர்சித்து குரல்பதிவுவெளியிட்டதற்காகஅவர் இடைநிறுத்தப்பட்டுவிளக்கம்கோரப்பட்டுள்ளது. தன்னை இப்படி இடைநிறுத்தியது தவறு என்றும், அடையாள அட்டை மோசடி செய்து வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவரின் வீட்டை மோசடியாக விற்ற குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் வழக்கு உள்ள ஒருவரைக் கட்சியின்உயர்பதவியில்வைத்துக்கொண்டு, பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரை இடைநிறுத்தாமல் பதவியில் தொடர்வதற்கு அனுமதி வழங்கிக்கொண்டு கட்சி தன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு முடியாது என்று துணிந்து மீண்டும் குரல் பதிவு வைத்துள்ள ஹான்ஸ் குமார், தனக்கெதிரான கட்சியின் நடவடிக்கையை எதிர்த்து நீதிமன்றத்தை நாடுவேன் என்றும் அறிவித்துள்ளார்.

முன்னதாக, தனக்கு கட்சியின் தலைமையால் உயிர் அச்சுறுத்தல் ஏற்படலாம்என்றுதெரிவித்துஹான்ஸ்குமார் திருகோணமலையில் உள்ள பொலிஸ் நிலையம்ஒன்றில்முறைப்பாடுசெய்திருந்தார். தலைமைக்கு எதிராகத் தான் குரல் கொடுக்கத் தொடங்கியதை அடுத்து தன்னைச் சிலர் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்தனர் என்றும் தனது வீட்டை நோட்டம் விட்டனர் என்றும் பொலிஸாரிடம் தெரிவித்திருக்கும் அவர், கட்சியின் 20 வருடகால உறுப்பினரான சுரேஸ் என்பவர் திடீரென தலைமையுடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து இறந்ததைப் போன்றுதனதுஉயிருக்கும்ஆபத்துஏற்படலாம் என்று முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட அடுத்தடுத்தநாள்களில்அவர்கட்சியில்இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று கட்சியின் செயலாளர் அவருக்கு அறிவித்துள்ளார். இதனால் அவர் நீதிமன்றத்தை நாடுவதற்கு உள்ளார். அதேநேரம், கட்சித் தலைவருக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டு எழுந்த நிலையில் அவரைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காமல் விட்ட தலைமைக்குழுவின் செயற்பாடுகளை இடைநிறுத்தக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கையில் கட்சியின்மற்றொருபொதுக்குழுஉறுப்பினரும் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றார். யாழ்ப்பாண முன்னாள் நீதிபதி ஒருவரின் மகனும் சட்டத்தரணியுமான அந்தப் பொதுக் குழு உறுப்பினர், இந்தச் சட்ட நடவடிக்கையில் தன்னோடு இணைந்துகொள்ள விரும்புபவர்களைத் தொடர்புகொள்ளுமாறும் பகிரங்கமாக அறிவித்துள்ளார். எனவே விரைவில் ரெலோவும் நீதிமன்றப் படிகளில் ஏறுவது தவிர்க்க முடியாததாகி வருகின்றது. .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சில கடமைகளில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில கோரிக்கைகளை முன்னிறுத்தி வைத்தியர்கள்இன்றுகாலை8.00மணிமுதல் தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்க உள்ளனர். அதற்கமைய வெளிநோயாளர் பிரிவு மருந்தகங்களில் உள்ள மருந்துகளை மாத்திரம் கொண்டு வைத்தியசாலைக்கு வருகைத்தரும் நோயாளர்களுக்கான சிகிச்சை சேவைகள் வழங்கப்பட உள்ளன.

தட்டுப்பாடு ஏற்படும் மருந்துகளை தனியார் மருந்தகங்களில் கொள்வனவு செய்யும் நடைமுறை முற்றாக நிறுத்தப்பட உள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், அரச வைத்தியசாலை இரசாயனப் பகுப்பாய்வு நிலையங்களில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை சேவைகளை மாத்திரமே நோயாளர்கள் பெறமுடியும், அதனைத் தவிர்த்து தனியார் நிலையங்களில் பரிசோதனை செய்ய நோயாளர்களுக்குப் பரிந்துரைக்கப் போவதில்லை. ஆளும்தரப்பினால் ஒழுங்கமைக்கப்படும் நடமாடும் மருத்துவ முகாம்களை தவிர்த்தல் உள்ளிட்ட மேலும் ஒரு சில கடமைகளில் இருந்து விலகி இருக்கவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

வைத்தியர்களில் தொழிற்சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்துவது தொடர்பில்கடந்தவெள்ளிக்கிழமைகொழும்பில் அமைந்துள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில், நாடளாவிய ரீதியில் உள்ள விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்க உறுப்பினர்கள் ஒன்றுகூடிக் கலந்துரையாடியிருந்தனர். மேற்படி வைத்தியர்களின் மத்திய செயற்குழு கூட்டத்தின்போது இன்று முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச வைத்தியசாலை கட்டமைப்பில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவிவருவதுடன், பற்றாக்குறையாக உள்ள மருந்துகளை தனியார் மருந்தகங்களில் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. அல்லது வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர்கள் மருந்துகளின்றி திருப்பி அனுப்ப வேண்டியுள்ளது. அதேபோல் அரச வைத்தியசாலைகளில் இரசாயன பகுப்பாய்வுநிலையங்களில்பரிசோதனைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், அவசியமான பரிசோதனைகளையும்நோயாளர்கள்தனியார் வைத்தியசாலைகளிலேயே மேற்கொண்டு வருகின்றனர்.

வைத்தியர்கள் தொழில் புரிவதற்கு ஏற்ற சூழல்இமையால்பெரும்அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துவருகின்றனர். வைத்தியசாலை அமைப்பிற்குள் நோயாளிகளுக்கு வழங்கப்படும் வசதிகள் திருப்திகரமாக இல்லை. அடிப்படை உட்கட்டமைப்பு வசதி, சுகாதார வசதி மற்றும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் ஆகியவற்றில் ஏராளமான சிக்கல்கள் உள்ளன. இந்த பிரச்சினைகள் தொடர்பில் சுகாதார அமைச்சு முதற்கொண்டு உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளது போதும், இதுவரை எவ்வித தீர்வுகளும் வழங்கப்படவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கடுமையாக குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகததாச நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் நவம்பர் 17 முதல் நாடளாவிய ரீதியில் தொழில் முறை நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது. வைத்தியர்களை இந்த நாட்டில் உள்ள விசேட ஊழியர் குழுவினராக அடையாளம் கண்டு அவர்களுக்கான சம்பளம் மற்றும் சலுகைகளை வழங்குவது அவசியம். ஆகையால் வைத்தியர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதனிக்கொடுப்பனவு, மேலதிக சேவைகால கொடுப்பனவு மற்றும் விடுமுறை கால கொடுப்பனவு தொடர்பிலும் ஆளும்தரப்பு கவனத்தில் கொள்வது அவசியம்.

அரச வைத்தியசாலை கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு 2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் உரிய தீர்வுகள் வழங்கப்படும் என நாம் எதிர்பார்த்தபோதும், எமது எதிர்பார்ப்புகள் தற்போது பொய்யாகியுள்ளன. ஆகையால் ஆளும்தரப்பின் இத்தகையசெயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியர்கள் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாட நாளை (இன்று) காலை 9.30 மணியளவில் அரசுத் தலைவருடன் சந்திப்பொன்றை ஏற்படுத்திக்கொடுத்துள்ளனர். இந்தக் கலந்துரையாடல் இதற்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடல் போல அமையக்கூடாது என்பதில் நாம் தீர்மானமாக உள்ளோம். தீர்க்கமான தீர்வுகள் வழங்கப்படவேண்டும் வாக்குறுதிகளை இனி ஒருபோதும் ஏற்கப்போவதில்லை.

ஆளும்தரப்பினர் எமக்கான தீர்வுகளைப் பெற்றுத் தருவார்கள் என எதிர்பார்க்கிறோம். அவ்வாறு இல்லை எனில் வைத்தியர்களால் நாளை (இன்று) முன்னெடுக்கப்பட உள்ள தொழிற்சங்க நடவடிக்கையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்த்துள்ளதுடன், அதை தீவிரப்படுத்தவும் தயாராக உள்ளோம் என்றார்.

## திருகோணமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

முன்னதாக திருகோணமலை கடற்கரையில் அனுமதி பெறப்படாத நிலையில் பௌத்த வழிபாட்டிடம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கை சனிக்கிழமை பின்னிரவில் திடீரென ஆரம்பிக்கப்பட்டது. பிக்குகள் உள்ளிட்ட பலர் அந்த இடத்திற்கு வந்து வழிபாட்டிடத்திற்கான கொட்டைகை அமைப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பிக்குகள்பிரித்ஓதிமதவழிபாட்டில் ஈடுபட்டனர். எனினும், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளத் திணைக்களத்தின் தலையீட்டை அடுத்து பொலிஸாரினால் அந்த நடவடிக்கை நேற்றுப் பகல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

திருகோணமலை மாநகர சபைக்கு உரித்தான கடற்கரைப் பகுதியில் ஏற்கனவே உள்ள அரச மரத்துடன் இணைந்த புத்தர் சிலைக் கட்டுமானத்தை அண்மித்து இந்தப் புதிய வழிபாட்டிடக் கட்டுமானம் அமைக்கும் வேலைகள் தொடங்கப்பட்டன. எனினும், கட்டுமான வேலைகளை முன்னெடுத்தவர்களில் எவரும் கைது செய்யப்படவில்லை. அவர்களுக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கைகளை இன்று நீதிமன்றம்மூலம்தாம்மேற்கொள்ளவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சட்ட அனுமதி அற்ற சிற்றூண்டிச்சாலை அனுமதிக்கப்பட்ட இடத்தைவிட அதிகமான பகுதிகளை ஆக்கிரமித்தகாரணத்தால்அதனைஅங்கிருந்து அகற்ற நவம்பர் 5 கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்தப் பகுதியைச் சேர்ந்த பிக்கு ஒருவர் திணைக்களத்திடம் கால அவகாசம் கோரியிருந்தார். 7 நாள் கால அவகாசம் வழங்கப்பட்டது. அது நேற்றுடன் முடிவடைந்தது. ஆனால், சிற்றுண்டிச் சாலை அகற்றப்படவில்லை. இதனால், சட்ட அனுமதியற்ற சிற்றூண்டிச்சாலை அங்கிருந்து உடைத்து அகற்றப்படும் என்று கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூல வளங்கள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையிலேயே திடீரென அந்தப் பகுதியில் ஒரு பௌத்த வழிபாட்டிடத்தை அமைத்து புத்தர் சிலையை நிறுவ அவசர அவசரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியினரால் உடனடியாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் இது பற்றி முறையிட்டப்பட்டது. அமைச்சரின் உத்தரவை அடுத்து பொலிஸாரினால் அந்தச் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது.

சிலைஅகற்றப்பட்டபோது அதனைத்தடுக்க பிக்கு ஒருவர் சிலையைக் கட்டிப்பிடித்தபடி அதனை அகற்றவிடாது தடுக்க முயன்றார். அவரது கைகளைப்பிடித்து விலக்கி சிலையை அகற்றமுயன்றபொலிஸ்அதிகாரியின்முகத்தில் அந்தப் பிக்கு ஓங்கி அடித்தார். இதையடுத்து அவரை அங்கிருந்து பலவந்தமாக இழுத்து அகற்றிய பொலிஸார் சிலையை எடுத்துச் சென்றனர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நேற்று நள்ளிரவு சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ள பதிவில் அமைச்சரின் உடனடி நடவடிக்கைக்காகத் தனது நன்றியைத் தெரிவித்திருந்தார். இரவு 8 மணியளவில் அடாவடியாகப் புத்தர் சிலை கொண்டு வந்து வைக்கப்பட்டபோது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து பேசப்பட்டது. இதையடுத்து 3 மணித்தியாலங்களுக்குள் உடன்நடவடிக்கைஎடுக்கப்பட்டு அந்தப் புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டிருக்கின்றது - என்று இரா. சாணக்கியன் எம்.பி. அந்தப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை திருகோணமலை மாநகர சபை உறுப்பினர்களை நகர சபையில் ஒன்றுகூடுமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் அழைப்பு விடுத்துள்ளார்.

## அனைத்துக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் எதிர்ப்பைத் தெரிவியுங்கள் என்று ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச அழைப்பு விடுத்தார்.

கொழும்பில்நேற்றுநடைபெற்றநிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று, விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை ஆளும்தரப்பு நிறைவேற்றவில்லை. உருளைக்கிழங்கு விவசாயிகள், பூசணி விவசாயிகள் மற்றும் வெங்காய விவசாயிகளுக்கு செய்யப்பட்ட அநீதிக்கு அந்த மக்கள் அரசாங்கத்தை வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகிறார்கள். இப்போது அந்த மக்கள் வீதிகளில் இறங்கினர்.

ஆளும்தரப்புபட்டதாரிகளுக்குமிகப்பெரிய அநீதியைச் செய்துள்ளது. இந்த நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியவில்லை. இந்த ஆளும்தரப்பு பொய்யான குற்றச்சாட்டுகளுக்குநாங்கள்பயப்படவில்லை.

ஆளும்தரப்புபொய்யானவாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்ட அனைத்துக் கட்சிகளும் நவம்பர் 21 நுகேகொடையில் எங்களுடன் சேர்ந்து ஆளும்தரப்பிற்கு எதிராகப் போராட்டம் நடத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## வன்முறையூடாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்துவது தவறா? அரசாங்கத்தை வழிப்படுத்தவே எதிர்பார்த்துள்ளோம், மாறாக அரசாங்கத்தை வீழ்த்துவது எமது என்னம்மல்ல.

திசைக்காட்டியுடன் எம்மை ஒருபோதும் ஒப்பிட வேண்டாம். 1977, 1987 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வன்முறையின் ஊடாக ஆட்சி அதிகாரத்தை பெற்றதை போன்றதொரு என்னம்எம்மிடமில்லை. தேர்தல் இடம்பெறும் வரை காத்திருப்போம். இறுப்பினும் ஆளும்தரப்பு செல்லும் வழி முறையற்றது அடக்குமுறையாளர்கள், ஊழல் வாதிகள், தீவிரவாதிகள் மற்றும் பொய்காரர்களைக் கொண்டதாகஇருக்குமாயின்அதைமக்களுக்கு தெரியப்படுத்த நாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை - என்றார்.


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நெகிழிப் பை கட்டணம்: சீர்ப்படுத்தல்கள் அவசியம்

இலங்கை சுற்றுச் சூழலுக்கான பொறுப்புணர்வை நோக்கிச் செல்லுவதற்காக ஒருமுறைப் பயன்படுத்தப்படும் நெகிழி (பொலித்தீன்) பைகளுக்கு கட்டணம் விதிக்க முடிவு செய்தது காகிதத்தில் நல்ல முடிவாகவே தெரிகிறது. பொலித்தீன் பயன்பாடையும், அதன் கவனக்குறைந்த கொழுப்பீட்டையும் குறைப்பதற்கான முயற்சிகள் எப்போதும் பாராட்டத்தக்கவை. பலர் இதனை வரவேற்றதும் உண்மை. ஆனால், புதிய விதிமுறையின் நடைமுறைப் பக்கமே சந்தேகங்களை எழுப்புகிறது.

வாடிக்கையாளர்கள் வசதிக்காக கட்டணம் செலுத்தத் தயங்குவதாக இல்லை என்பதை முந்தைய அனுபவங்கள் காட்டியுள்ளன. சில ரூபாய் கூடுதல் செலவு செய்தாலும், தங்களுக்குத் தேவையான பொலித்தீன் பைகளைப் பெற்றுக்கொள்ள பொதுமக்கள் தயங்குவதில்லை. வியாபாரிகளும் அதேபோல, மாற்று வழிகளுக்குச் செல்லும் சிரமத்தைக் காட்டிலும், பழக்கத்துக்கு ஏற்ற பொலித்தீன் பைகளையே வழங்குவதே எளிதென எண்ணுகிறார்கள். இவ்வாறாக, கட்டண விதிமுறை கொண்டு வந்தாலும், அதன் தாக்கம் மிகக் குறைவாகவே இருக்கும் என்ற எதிர்ப்புக்குரலும் எழுந்துள்ளது.

இதனிடையே, நெகிழிப் பைகளுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு ஏற்ற காகிதப் பைகளை அறிமுகப்படுத்தும் புதிய முன்மொழிவு நல்ல முன்னேற்றமாகவே கருதப்பட வேண்டும். சரியான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட காகிதப்பைகள் சிதைவு பெறக்கூடியவை; சுற்றுச்சூழலுக்கு குறைந்த பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. ஆனால், இந்த முன்மொழிவின் காலக்கட்டம் தொடர்பான கேள்விகள் தவிர்க்க முடியாது. நெகிழிப் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் முன் அல்லது அதனுடன் இணைந்தே உறுதியான மாற்று வழிகள் கொண்டு வரப்படவேண்டியது வழக்கம். மக்கள் கையில் மாற்று வாய்ப்புகள் இல்லாதபோது, விதிமுறைகள் எதிர்ப்பையும் இயலாமையையும் உருவாக்குகின்றன.

இலங்கையில் பல ஆண்டுகளாக காகித உற்பத்தி மற்றும் மறுசுழற்சி துறைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் உள்ளன. அவற்றுக்கு ஆளும்தரப்பின் சரியான ஆதரவு கிடைத்திருந்தால், இன்று நாம் நிலைத்த தீர்வுகளுக்குப் பல கட்டங்கள் முன்னேறியிருப்போம். காகிதப்பை உற்பத்தித் துறையை மேம்படுத்துவது வேலைவாய்ப்பை உருவாக்கும்; உள்நாட்டு தொழில்களை ஊக்குவிக்கும்; புதுமையான பொதிவடிவமைப்பு முயற்சிகளை உருவாக்கும். எனவே, இந்த முன்மொழிவு தாமதமாக வந்தாலும், அவசியமான ஒன்றாகவே கருதப்படவேண்டும்.

எனினும், மாற்று வழிகள் இருப்பதாலே மட்டும் மாற்றம் தானாகவே நடைபெறாது. இதனைச் செயல்படுத்த பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விரிவான தேசிய முயற்சி அவசியம். சுற்றுச்சூழல் பற்றிய பொறுப்புணர்வு ஒரே நாளில் உருவாகாது. இன்று எடுக்கும் முடிவுகள், எதிர்கால தலைமுறையின் வாழ்வை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டியது முக்கியம். இல்லையெனில், விதிமுறைகள் பொதுமக்களிடம் சிரமமே தோன்றும்; ஒத்துழைப்பாக மாறாது.

நெகிழிக் கட்டண விதிமுறை சுற்றுச்சூழல் நாசகாரப் பொருட்களுக்கு எதிரான பெரும்பணியின் முதல் கட்டம் மட்டுமே என அதிகாரிகள் கூறுகின்றனர். அப்படியே என்றால், இது தொடர்ச்சியான பொது விழிப்புணர்வு, தெளிவான கொள்கை திசை, தொழில் நிறுவனங்களுடன் நெருங்கிய ஆலோசனை ஆகியவற்றுடன் இணைந்திருக்க வேண்டும். மக்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என்ற உணர்வை ஏற்படுத்துவது தவறு. தன்னார்வத்துடன், பெருமையுடன் மாற்றத்துக்கான பங்காளிகளாக மாற வேண்டிய சூழலை அரசு உருவாக்க வேண்டும்.

இந்தச் சூழலில், நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு (CAA) மிகப் பெரிய பொறுப்பு உள்ளது. காகிதப்பைகள் உள்ளிட்ட மாற்று பொருட்கள் விலை உயர்வை எதிர்கொள்ளாமல், தரநிலையுடன், நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதை உறுதி செய்ய வேண்டும். உற்பத்தியாளர்களும் அரசாங்க ஆதரவைப் பெற்று, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற உற்பத்தி முறைகளை விரிவுபடுத்தக் கூடிய சூழல் உருவாக வேண்டும்.

நெகிழிப் பைகளுக்கு மாற்றாக காகிதப் பைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்துவது நாடு முன்னேறுவதற்கான தேவையான படி. ஆனால் திட்டமிடல், விழிப்புணர்வு, தொழில் ஆதரவு ஆகியவை நன்றாக இணைக்கப்படாவிட்டால், நல்ல கொள்கைகளும் நிலைத்திருக்க முடியாது.

ஆளும்தரப்பு இன்று எடுத்துள்ள முடிவு சரியான திசையில் முன்னேறுவதாக இருக்கலாம். ஆனால் அந்தப் பயணத்தில் மக்கள், தொழில்துறை, கொள்கை வடிவமைப்பாளர்கள் என அனைவரும் ஒரே திசையில் பயணிக்க வேண்டியது அவசியம். அவ்வாறு இணைந்து செயல்படும் போதுதான் இலங்கை நிலைத்த எதிர்காலத்தை நோக்கி உண்மையிலேயே நகர முடியும்.

# பொலிஸ் உயரதிகாரிகள் 6 பேருக்கு இடமாற்றம்

மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர்கள் 6 பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துறைக்கமைய மேற்படி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துறைக்கமைய பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால் மேற்படி 6 மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர்களுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து பொலிஸ் நிர்வாக சேவைக்குப் பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் மெதவத்த பொலிஸ் பயிற்சி மற்றும் உயர் பயிற்சிக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் குற்ற மற்றும் போக்குவரத்து மாவட்டப் பிரிவுக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரன்மல் கொடிதுவக்கு, அந்தப் பதவிக்கு மேலதிகமாக சிறுவர் மற்றும் மகளிர் துஸ்பிரயோக நிவாரண மாவட்ட பிரிவுக்கு பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபராகவும் நியமனம் பெற்றுள்ளார். அத்தோடு மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் தனபால வட மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து வடமத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபராகவும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் சிரிவர்தன பொலிஸ் சிறப்பு பணிக்குழு மாவட்டத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவியிலிருந்து வட மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபராகவும், மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் சம்பத் குமார பொலிஸ் சிறப்பு பணிக் குழு மாவட்டத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ்மா அதிபராகவும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# ஒப்பந்தங்களில் நாட்டை கோட்டைவிட்டுள்ளனர்

## கம்மன்பில கடும் சாடல்

வரலாற்றை மீட்டுப் பார்க்கும்போது இராணுவ பூமியில் நாட்டைப் பாதுகாத்த ஆட்சியாளர்கள் ஒப்பந்தங்களில் நாட்டை கோட்டை விட்டுள்ளனர். இலங்கை பாதுகாப்பு பிரிவு மற்றும் அமெரிக்காவின் மொன்டானா பிராந்தியத்தின் பாதுகாப்பு பிரிவினருடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எண்ணி ஜுலி சங் மகிழ்ச்சியில் உள்ளார், என்பதை அறிந்ததும் எமது நாட்டை எண்ணி அஞ்ச வேண்டியுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற அமைச்சரும் பிவிதுருஹெல உறுமய கட்சியி ன் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நவம்பர் 14 அமெரிக்க ஆளும்தரப்பு பிராந்திய இராஜதந்திர தொடர்புகளுக்கமைய இடம்பெற்ற நிகழ்வொன்றில், இலங்கை பாதுகாப்பு பிரிவு மற்றும் அமெரிக்காவின் மொன்டானா பிராந்தியத்தின் பாதுகாப்பு பிரிவினருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பில் அமெரிக்க தூதுவர் ஜீலி சங் தெரிவிக்கையில், இலங்கை மற்றும் அமெரிக்கவுக்கிடையிலான தொடர்பின் புதிய அத்தியாயம் இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஆரம்பமாகியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு அமெரிக்காவின் பிரபலமான இந்து- பசுபிக் மூலோபாயத்தின் ஒரு முக்கிய பகுதியாக இந்த ஒப்பந்தத்தை அடையாளப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையை எப்போதும் குறை கூறும் ஜுலி சங் தற்போது மகிழ்ச்சியில் உள்ளார், என்பதை அறிந்ததும் எமது நாட்டை எண்ணி அஞ்ச வேண்டியுள்ளது. இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட 7 ஒப்பந்தங்களைப் போலவே தற்போது அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பிலும் எவ்வித தகவல்களும் வெளிப்படுத்தப்படவில்லை.

அதில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பிலும் எமக்குத் தெரியாது. தகவல்களை வெளிப்படுத்தாமையால் அச்சம் கொள்ள வேண்டியுள்ளது. மீள எரிய முடியாத ஒன்றை கையகப்படுத்த வேண்டாம் என்னும் கூற்று பலம் பொருந்திய நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களுக்கு பொருந்தும். அவ்வாறான நாடுகளுடன் மேற்கொள்ளும் ஒப்பந்தங்களில் இருந்து நாம் விலக முடியாது. ஆகையால் ஒப்பந்தம் ஒன்றை கைச்சாத்திடுவதற்கு முன்னர் அவதானத்துடன் செயற்படுவது மிக அவசியம்.

வரலாற்றை மீட்டுப்பாக்கும் போது இராணுவ பூமியில் நாட்டை பாதுகாத்த ஆட்சியாளர்கள், ஒப்பந்தங்களில் நாட்டை கோட்டை விட்டுள்ளனர். இந்திய ஆளும்தரப்பு ஏனைய நாடுகளுடன் மேற்கொள்ளும் ஒப்பந்தம் தொடர்பில் அந்நாட்டு மக்கள் கேள்வி எழுப்புவதில்லை. தமது ஆளும்தரப்பால் நாட்டுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என அம்மக்கள் முழுமையாக நம்பிக்கை வைத்துள்ளனர். எனினும் துரதிஷ்டவசமாக எமது ஆளும்தரப்பு மீது இலங்கை மக்களுக்கு நம்பிக்கையில்லை. இந்நாட்டில் மன்னராட்சி இடம்பெற்ற காலமுதல் ஏனைய நாடுகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் நாட்டு தீங்கினை மாத்திரமே ஏற்படுத்தியுள்ளனர் - என்றார்.

# பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் போதைப் பொருள் தடுப்புக் குழுக்கள்

## நிறுவும் சுற்றறிக்கை இன்று வெளியாகும்

நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் போதைப்பொருள் தடுப்புக் குழுக்களை நிறுவுவதற்கான சுற்றறிக்கை வெளியிடப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் விஜேபால, இந்த சுற்றறிக்கை இன்று திங்கட்கிழமை வெளியிடப்படும் என்று கூறினார்.

இந்த முயற்சி அரசு நிறுவனங்களில் தேசிய செயல்பாட்டுக் குழுக்களை நிறுவும் திட்டத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நடவடிக்கையின் ஒரு பகுதியாகும். அதன்படி, அனைத்து அமைச்சகங்கள், துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு போதைப்பொருள் தடுப்பு குழுக்களை நிறுவ அறிவுறுத்தும் ஒரு சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மூலம் வெளியிடப்படும்.

மேலும், அரசுத் தலைவரின் செயலாளர் மூலம், அரசு சாரா நிறுவனங்களிலும் போதைப்பொருள் தடுப்பு குழுக்களை நிறுவுவதற்கான சுற்றறிக்கை வெளியிட சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் 1818 அவசர தொலைபேசி எண்ணுடன் தொடர்புடைய அலுவலகம் நவம்பர் 22 கொழும்பில் திறக்கப்படும் என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

# 115 பேர் கைது

முழு நாடுமே ஒன்றாக என்ற நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்துக்கமைய சனிக்கிழமை மாத்திரம் 1115 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முழு நாடுமே ஒன்றாக தேசிய செயற்பாடு என்ற தொனிப்பொருளின் கீழ் கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் விநியோகத்தை வலுவிழக்கச் செய்தல், போதைப்பொருளுக்கான கேள்வியை இல்லாமல் ஒழித்தல், நடவடிக்கைகளை விரைவு படுத்தல், போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பு, அதன் பயன்பாட்டை முற்றாக ஒழிக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகமைய, 1115 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நாடு முழுவதும் சுமார் 1131 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார், 754 கிராம் ஐஸ் போதைப்பொருள், 531 கிராம் ஹெரோயின், 8 கிலோ 953 கிராம் கஞ்சா ஆகிய விஷ போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் கைது செய்யப்பட்ட 31 சந்தேகநபர்களுக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள 63 பேர் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அத்தோடு கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரை 18,909 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சந்தேகநபரைக் கைதுசெய்ய பொது மக்கள் உதவி தேவை

அறுகம்பை பகுதியில் வெளிநாட்டு பெண் சுற்றுலாப்பயணி ஒருவருக்கு பாலியல் அச்சுறுத்தல் விடுத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்ய பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அறுகம்பை பகுதியில் சுற்றுலாவுக்காக இலங்கைக்கு வருகை தந்திருந்த வெளிநாட்டுப் பெண் ஒருவரிடம் பாலியல் அச்சுறுத்தல் விடுத்த இளைஞன் தொடர்பில் விசாரணைகள் தொடங்கப்பட்டு, சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஒக்டோபர் 25 சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அறுகம்குடா பகுதிக்குச் சுற்றுலா சென்றிருந்த வெளிநாட்டுப் பெண் ஒருவரிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் ஒருவன் பாலியல் அச்சுறுத்தல் விடுத்த காணொளி ஒன்று சமீப நாட்களாக சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவி வருகிறது.

இதையடுத்து, பாதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பெண் பொலிஸாரிடம் முறைப்பாடு அளித்துள்ளார். சமூக வலைதளங்களில் பரவிய காணொளி மற்றும் முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த அதிகாரிகள் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞனை அடையாளம் கண்டுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் புகைப்படத்தில் உள்ள சந்தேகநபர் தொடர்பில் தகவல் அறியும் பட்சத்தில் உடனடியாக பொலிஸாருக்கு தெரியப்படுத்துமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கமைய பொத்துவில் பொலிஸ் நிலையம் 063 2248022 மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 071 8591168 ஆகிய இலக்கங்களை தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க முடியும். சம்பவம் தொடர்பில் பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



## கட்சிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது

நவம்பர் கொழும்பில் இடம்பெறவுள்ள ஆளும்தரப்பிற்கு எதிரான பேரணி ஆளும்தரப்பிற்கு பெரியதொரு சவாலாக அமையும். ஆளும்தரப்பு முறையற்ற செயற்பாடுகளைசுட்டிக்காட்டிஇந்தபேரணியை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்.

இந்தப்பேரணியில்சகலஎதிர்க்கட்சிகளும் ஒன்றிணையும்.போலியானவாக்குறுதிகளை குறிப்பிட்டு மக்களை ஏமாற்றி. ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தது .மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஆளும்தரப்பு நிறைவேற்ற வேண்டும்.

பாதாளக் குழுக்களை கைது செய்தல்,போதைப்பொருட்களை கைப்பற்றல் பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. போதைப்பொருள் ஒழிப்புக்கு முன்னுரிமை வழங்குவதாகஅரசுத்தலைவர்குறிப்பிடுகிறார். புதிய திட்டங்களும் அமுல்படுத்தியுள்ளார்.

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களைஒழிப்பதற்குஆளும்தரப்புஎடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.ஆனால் இந்த விடயத்தில் அரசுத் தலைவர்யின் உண்மைத்தன்மை சந்தேகத்துக்கிடமாக உள்ளது.

சுங்கத்தில் இருந்து பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் பற்றி இதுவரையில் உண்மை வெளிவரவில்லை. இலங்கைக்கு இரண்டு கொள்கலன்களில் ஐஸ் போதைப்பொருள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச புலனாய்வு சேவை வழங்கிய புலனாய்வுத் தகவலையும் ஆளும்தரப்பு அலட்சியப்படுத்தியது.

நாட்டில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும்பாதாளக்குழுக்களின்செயற்பாடுகளை ஊக்குவித்துவிட்டு அரசுத் தலைவர் தற்போது மக்கள்மத்தியில்வீரனாகுவதற்குகடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்.கடந்த அரசாங்களும்போதைப்பொருள்ஒழிப்புக்கான நடவடிக்கைகளை பிரபல்யப்படுத்தவில்லை.

ஆளும்தரப்புமுறையற்றசெயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே எதிர்வரும் 21 ஆம் திகதி பேரணியில் ஈடுபடவுள்ளோம். கொள்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதற்கு இது தேர்தலல்ல என்பதை எதிர்கட்சிகளுக்கு குறிப்பிட்டுக்கொள்கிறோம்.ஜனநாயகத்தை பாதுகாக்க சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணையவுள்ளன என்றார்.

## பெருந்தோட்டக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

200 ரூபா சம்பளம் வழங்குவதாக ஆளும்தரப்பு விடுத்த அறிவிப்பு முறையற்றது. சட்ட வழிமுறைகளுக்கு அமைய இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ரோஹினி கவிரத்ன குறிப்பிட்டதை ஆளும்தரப்புதனது அரசியல் பரப்புரைக்காகப் பயன்படுத்திக்கொண்டது.

தோட்டகம்பனிகளுடன் ஆளும்தரப்பினர் டீல் வைத்துள்ளார்கள். கம்பனிகள் அரசுத் தலைவர் அநுரகுமாரவின் வெற்றிக்காகவே செயற்பட்டன. தோட்ட உரிமையாளர்கள் அரசுத்தலைவரை'மச்சான்'என்று அழைத்துப் பேசுகிறார்கள்.

பெருந்தோட்ட நிறுவனங்கள் வருடாந்தம் இலாபமடைகின்றன. இந்த நிறுவனங்களின் இலாப, நட்டக் கணக்கு கணக்காய்வு செய்து வருமானத்தின் உச்ச பலனை ஆளும்தரப்பு தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

2026 ஆம் ஆண்டிக்கான வரவு - செலவுத் திட்டம் முதலாளி வர்க்கத்துக்கு சாதகமாக உள்ளது.நடுத்தர மக்களுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் ஏதும் இல்லை.மக்கள் அடுத்தாண்டு பல விடயங்களை தெரிந்துக் கொள்வார்கள் - என்றார்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com




புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2025இல் வெளியிடப்பெற்றது